யில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தெளிவாக இந்த ஆசிரியர்களுக்கு ஊதியத்தை வழங்கலாம் என்று அனுமதி அளித்துவிட்டதற்குப் பிறகு அது முறைப்படி, நியாயப்படி, சட்டப்படி வழங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. விரைவிலே அரசு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் இதிலே கொஞ்சம் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே வேண்டாம். நான் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். இதிலே வேண்டாம். ஆணை வழங்கப்படும் என்று அமைச்சர் சொல்லிவிட்டார். அதற்கு அடுத்து நடைமுறைப் பிரச்சினை. இதில் நீங்கள் பேசிவிட்டீர்கள்.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி அவர்கள் நேற்றையதினம் என்னிடத்திலே ஒரு உரிமைப் பிரச்சினையைப் கொடுத்திருந்தார். அந்த உரிமைப் பிரச்சினை முறையாக இல்லை என்று நான் அனுமதி மறுத்திருந்தேன். அதற்கு மேற்கொண்டு சில விளக்கங்கள் இன்றையதினம் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : ஸ்பீக்கர், சார்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, திரு. ம. சின்னசாமி,

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்புக்கு மேலே பேச்சு கிடையாது. என்னுடைய ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள் என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நீங்கள் அதிலே என்ன பேச வேண்டியிருக்கிறது? (குறுக்கீடு) திரு. இளம்வழுதி உட்காருங்கள்,

என்னுடைய ஆய்விலே இருக்குபோதும் நீங்கள் பேசுவதற்கு எந்த அனுமதியும் இல்லை. என்னுடைய ஆய்விலே இருக்கிறது என்று சொல்லும்போது, அதிலே பேசுகிறேன் என்று சொல்வதற்கு ஒரு உறுப்பினருக்கு உரிமையில்லை. பேரவைத் தலைவருடைய ஆய்விலே இருக்கிற பிரச்சினையில் ' நான் பேசவேண்டும் ' என்று சொல்வதற்கு யாருக்கும் எந்த உரிமையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமருங்கள், திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''திருச்சி மாவட்டம், மாயனூர் தமிழ்நாடு. . . . (குறுக்கீடுகள்)

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உரிமைப் பிரச்சினை கொடுக்கிறபோது முறையாக எப்படிக் கொடுப்பது என்று தெரியாமல் கொடுத்துவிட்டு, அதை நான் நிராகரிக்கும் போது, அதற்கு பிறகு மறு விளக்கம் சொல்லவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பதற்கு என்ன இருக்கிறது ? ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுக்கும்போதே நான் இன்னார் மேலே கொடுக்கிறேன், அப்படி என்றுகூட கொடுக்காமல் உரிமைப் பிரச்சினை என்று ஒன்றைக் கொடுத்து விட்டு அதை நிராகரித்தால் அதற்கு நான் விளக்கம் கொடுக்கிறேன் என்று திரும்ப வந்து கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறேன். அதிலே நான் பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு இந்த மாதிரி முரண்டு பிடிப்பது சரியல்ல. ஒரு உறுப்பினர் (குறுக்கீடு) இருங்கள். என்னுடைய அறிவுரையை மீறி நீங்கள் பேசிக்கொண்டிருப்பதால் நடவடிக்கைக்கு ஆளாகவேண்டி வரும். ஏற்கெனவே நீங்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறீர்கள். இதே முறையிலே பேசித்தான் வெளியேற்றப்பட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, உட்காருங்கள். இளம் வழுதி, நீங்கள் உட்கார முடியுமா முடியாதா உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–05

4. உறுப்பினர் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உட்காருங்கள்.

திரு. இளம்வழுதியும் திரு. தாமரைக்கனியும் உட்கார வேண்டும். நான் நின்று கொண்டிருக்கிறேன், **உட்காருங்கள்.**